திருவள்ளுவர் ஆண்டு 2044

ஆகஸ்டு - 2013

# செந்தமிழ்

தொகுதி : 57
பகுதி : 10

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



இந்தியத் திருநாட்டின் 67வது சுதந்திர தின விழாவில் செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள் கொடியேற்றி வைத்தார். அருகில் தமிழ்ச்சங்கச் செயலர் திருமிகு. இரா. அழகுமலை அவர்கள், கல்லூரித்தலைவர் உயர்திரு. சு. வீரணசாமி அவர்கள், துணைத்தலைவர் உயர்திரு. க. முத்தையா பசும்பொன் அவர்கள், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள்

// Masthead line: செந்தமிழ் //
# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 57      திங்கள் இதழ்

பகுதி : 10      திருவள்ளுவர் ஆண்டு 2044

ஆகஸ்டு 2013



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தொல்காப்பியப் பூங்காவில் பண்டைய மகளிர் மாண்பு (சென்ற இதழ் தொடர்ச்சி) | பா. திருமகள் | 4 |
| தமிழில் சுயமுன்னேற்ற நூல்களில் வாழ்வியல் சிந்தனையின் போக்கு | ஆ. பாப்பாத்தி | 10 |
| வினாவிடை | ஆறுவிரல் ஐம்பொறி | 15 |
| மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்துச் சுவடிகள் சிந்தனைத் துளிகள்.. | | 17 |
| உடம்படுமெய்கள் – உடம்படா வாதங்கள் 2 | புலவர் சா. பன்னீர்செல்வம் | 18 |
| பூவும் பாவும் | புலவர் சி. பாண்டுரங்கன் | 23 |
| திருக்குறளின் தோற்றக் களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள் (பெருமை சிறுமை) | முனைவர் கா. அரங்கசாமி | 35 |
| தாய்த் தமிழைச் சேய்கள் மறந்ததேன்? | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 39 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

நம் இந்தியத் திருநாட்டின் 67வது சுதந்திர தின வாழ்த்துக்களோடு ஆகஸ்ட் மாதச் செந்தமிழ் இதழ் வாசகர்களை நாடி வெளிவந்துள்ளது.

தொல்காப்பியப் பூங்கா வாயிலாகத் தொல்காப்பியர் புலப்படுத்தியுள்ள மகளிரின் மாண்புகளை, பா. திருமகளின் கட்டுரை வெளிக் கொணர்ந்துள்ளது.

இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்கும் நோக்கோடு வெளிவருகின்ற தமிழில் சுய முன்னேற்ற நூல்களில் காணப்படும் வாழ்வியல் சிந்தனையின் போக்கினை ஆ. பாப்பாத்தி எடுத்தியம்பியுள்ளார்.

நம் செந்தமிழ் மொழியில் உள்ள இலக்கண, இலக்கிய நுட்பங்களைத் தமிழர்கள் என்றும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அக்கறையோடு, நன்னூல் மற்றும் திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு சில தரவுகளை வினா விடை என்னும் உத்திமுறையைக் கையாண்டு ஆறுவிரல் ஐம்பொறி தந்துள்ளார்.

நான்காம் தமிழ்ச் சங்கத்தின் பதிப்புப் பணி மற்றும் அதற்கு அடிநாதமாக விளங்கிய ஓலைச் சுவடிகள் குறித்த மிகச் சில குறிப்புக்களை மட்டும் முனைவர் மு. மீனா வாசகர்களுக்காக வழங்கியுள்ளார்.

புலவர் சா. பன்னீர் செல்வத்தின் விவாதக் கட்டுரை ஆரோக்கியமான ஆய்வுப் போக்கினைப் புலப்படுத்தியுள்ளமை பாராட்டிற்குரியது.

மக்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ள பூ, இலக்கண இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள தன்மையைப் புலவர் பாண்டுரங்கனின் கட்டுரை ஆழமாக வெளிக்கொணர்கிறது.

திருக்குறளில் அமைந்துள்ள அறவியல், மெய்யியல் கருத்துக்களுக்குச் சங்க இலக்கியமே தோற்றக் களமாகத் திகழ்கிறது என்பதை முனைவர் கா. அரங்கசாமி வெளிக்காட்டியுள்ள திறம் பாராட்டிற்குரியது.

தாய் மொழியின் வளர்ச்சியே மண்ணின் மைந்தர்களை உயர்த்தும். அதனைத் தமிழின் சேய்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்தோடு கவிவேந்தர் கா. வேழவேந்தன் கவிதை படைத்துள்ளார்.

**ஆசிரியர்**

# தொல்காப்பியப் பூங்காவில் பண்டைய மகளிர் மாண்பு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பா. திருமகள்
குமாரபுரம்

## பிள்ளைப் பேற்றின் மகிமை

......பேறு பார்க்க மருத்துவச்சி வந்த பிறகே
பிரிந்து வந்தான் பெருமூச்சி விட்டவாறு
ஆண்குழந்தை என்ற ஒலி அறைக்குள்ளே கேட்டவுடன்
ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு
அனுமதி கிடைத்தவுடன் அங்கே நுழைந்தான்
அவள் வலியெல்லாம் போன இடம் தெரியவில்லை....

சீராக இருவர் உள்ளம் அமைந்த வீடு. குறையேதும் இல்லாத அமைதியான வாழ்க்கை. கருத்தாக உடல் நலம் காக்க வேண்டும் என்று கருத்தரித்த முதல் மாதம் முதல் ஒன்பதாம் மாதம் முடியத் தீராக் கவலையுடன் அவள் பின்னே திரிந்தான். பேறுகாலம் பார்க்க மருத்துவச்சி வந்த பிறகே பிரிந்தான். ஆண் குழந்தை பிறந்தவுடன் ஆனந்தக் கூத்தாடினான்.

........தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்
புதல்வன் பயந்த புனிறு தீர்பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தாள் நோக்கி
அய்யர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்

(பொருளதிகாரம்-கற்பியல் – நூற்பா5)

## கணவன் மனைவியிடையேயான அன்பு

குமரன் குமரி வீட்டில் குழந்தை பிறந்த விழாவுக்கு
கோட்டைத்தெரு வேலனும் வந்திருந்தான் – மாட்டுக்
கொம்பொன்றில் செய்த சிற்பம்
குழந்தைக் கழுத்திலணிந்து மகிழ்ந்தான்

என்ன வேலா என்றுமில்லாமல் இன்று
தன்னந்தனியாக வந்துள்ளாய்
ஏனழைத்து வரவில்லை வஞ்சியினை, என
வாஞ்சையுடன் இருவருமே அவனைக் கேட்டார்!
பேச்சில்லை சில நாளாய், பிள்ளையில்லாக்குறையை
மூச்சுக்கு முப்பது தடவை நான் முணுமுணுத்தேன்
ஆச்சியின் வீட்டுக்குப் போய் விட்டாள்
ஆயிற்று ஆறுகிழமை என்றான்.....

கணவன் மனைவியிடையே ஊடல் இருந்தால் அதனை மறந்து இணைந்து வாழ வேண்டும். அவ்வாறு இணைந்து வாழ்ந்தால் தான் பிள்ளைப் பேற்றினை அடையமுடியும். ஆயிரங்காலத்துப் பயிராம் இல்வாழ்வின் அரிய பயனை அடைவதற்கும், இல்லறமல்லது நல்லறமன்று, அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று எனக் கூறுகிறார். வீட்டில் பிள்ளை இல்லையெனில் நாட்டுக்கே பிள்ளையாக உழைப்போம் என்று கூறுகிறார் கவிதை வடிவில்,

*................ பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்*
*பிரிவின் நீக்கிய பகுதிக் கண்ணும்*
*நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுளும்,*
*சென்று கையிகந்து பெயர்த்து உள்ளிய வழியும்*
*காமத்தின் வலியும், கைவிடின் அச்சமும்,*
*தான் அவள் பிழைத்த நிலையின் கண்ணும்*
*உடன் சேறல் செய்கையோடு அன்னவை பிறவும்*
*மடம் பட வந்த தோழிக்கண்ணும்,*
*வேற்று நாட்டு அகல்வயின் கண்ணும்,*
*அவ்வழிப் பெருகியச் சிறப்பின் கண்ணும்....*

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா 5)

## தலைமகனின் திருந்திய உள்ளம்

தரையில் ஓடியாடித் தண்ணீரில் விளையாடி
நுரையில் குமிழ் ஊதி
தண்டை சதங்கை குலுங்க நடந்து

தமிழ் மழலை இசைக்கும் தளிர் அவன்
தாயிருக்கும் திசை நோக்கிச் சென்ற போது....
விரையொன்று போட்டால்
சுரையொன்றா முளைக்கும்?.....
எனக்கென பிள்ளை கூட உறவற்றுப்போகும்
என்று வாடினாள் வருந்தினாள் அப்போது
வகை வகையாய் அணிமணி பூட்டப்பெற்று
வாய் நிறைய அம்மா என்றழைத்தவாறு வந்தான் மகன்
.... இவன் ஒருவனே இருள் நீக்கும் கதிர் இனிமேல்
இன்றைக்கே கிளம்புகின்றேன் இவனோடு என் தாய் வீடு !....

கணவனுக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதை அறிந்த மனைவி தன் மகனை இடுப்பில் சுமந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேற முற்படும் போது கணவன் அவளைத் தடுத்து நிறுத்தி அன்பு காட்டி, நல்லறம் நடத்துவோம். மன்னித்துவிடு எனக் கூறுவது போல கீழே குறிப்பிட்டுள்ள நூற்பாவிற்கான விளக்கத்தை அமைத்துள்ளார் கலைஞர்.

காமக்கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும்,
சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி............

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா – 6)

## இன்பச் சுற்றுலா

குட்டி போட்ட பூனை போலக்
குடும்ப வீட்டுக்குள் அலைந்திடாமல்
கூண்டுக்கிளி வாழ்வு நடத்தி
நாடே இதுதான் என்றிருந்திடாமல்
ஆண்டுக்கு ஓரிரு முறையேனும்
அன்றைக்கே சுற்றுலாச் செல்லும் வழக்கம்
தலைவன் தலைவி கடைப்பிடித்தனர் என்றும்
தலைநகர் கடந்து பிறநகர் சென்றார் என்றும்
குழந்தைச் செல்வங்களையும் கூட அழைத்துக் கொண்டு....

தொல்காப்பியர் காலத்தே குட்டி போட்ட பூனை போல வீட்டிற்குள் கூண்டுக்கிளி வாழ்வு வாழாமல் குழந்தைகளுடன் இன்பச் சுற்றுலா ஆண்டிற்கு இருமுறை நீர்த் துறைகளுக்கும், சோலைகளுக்கும் சென்றனர் தலைவன் தலைவி என்று கீழ்க்காணும் நூற்பாவிற்கு விளக்கத்தைத் தந்துள்ளார் கவிதை வடிவில்.

யாறும் குளனும் காவும் ஆடிப்

பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப

(பொருளதிகாரம்-கற்பியல்-நூற்பா50)

## வீர மகளிர் செயல்

மலையுருண்டு வருவது போல் களத்தில் யானைகள் வரும் போது
நிலை குலைந்து போகாமல் நேர் நின்று மோதும் வீரன்
தலையிழந்து போனாலும் கவலையில்லை, தன் நாட்டுக்
கொடி உயர்ந்து பறக்க வேண்டுமெனப் போர்புரிவான்!
நெற்றியிலே குருதிப் பொட்டிட்டு விடை கொடுத்தனுப்பிய தலைவி
வெற்றி நீ பெற்று வருக என வாழ்த்தினாளே : ....................

தலைவனைப் போருக்கு நெற்றியில் குருதிப் பொட்டிட்டு விடை கொடுத்தனுப்புவாள் தலைவி. போரில் வெற்றி பெற்றப்பின்தான் தலைவன் தலைவியை நினைப்பான். வெற்றிச் செய்தியினைக் காற்றின் வாயிலாகத் தலைவிக்கு அனுப்புவான் என்று பின்வரும் நூற்பாவில் உள்ள கருத்தினை விளக்குகிறார் ஆசிரியர்.

கிழவி நிலையே வினையிடத்து தோன்றும்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்

(பொருளதிகாரம்-கற்பியல்-நூற்பா 45)

## பாசறையில் மகளிர்த் தொண்டு

மெல்லியலார் என மதிப்பளித்துப் பரிவு காட்டி
மகளிரைப் பாராட்டி வாழ்ந்த காலம் என்பதாலே,
ஆபத்தான இடங்களிலே அவரை அணுகிடச் செய்யாது

**அமர்க்களத்துக்கான வெளிப்புறப் பணிகளில் மட்டும் அன்று**
**பாசறையில் பாவையர் தொண்டு தொடர்ந்ததாம் !**

மெல்லியலார் என்று மகளிரைப் போற்றிய காலம். மகளிர் பாசறைக்குச் சென்று அங்கு அடிப்பட்ட வீரர்களுக்கு மருந்திட்டு, தொண்டு செய்துள்ளனர் என்று கீழே காணும் நூற்பாவிற்கு விளக்கம் தருகிறார்.

எண்ணரும் பாசறைப் பெண்ணோடு புணரார்

(பொருளதிகாரம்-கற்பியல்-நூற்பா 34)

## வினைமுடித்து தலைவியைக் காண தலைவன் வரும் விதம்

**வினையொன்றை முடிப்பதற்கு வேற்றூர் சென்ற வேலன்**
**விரைவில் திரும்பி வஞ்சியைச் சந்திக்கப் புரவியிலே புறப்பட்டான்**
**வான் சிந்தும் கண்ணீர் உழவனுக்கு உவகை தரும் மொழியில்**
**தேன் சிந்தும் வஞ்சிக்கு வேலன் வருகைதான் உயிரே தரும்....**

தொழில் ரீதியாக வெளியூர் சென்ற வேலன் வேலை முடிந்து புரவியில் வருகின்றான். தலைவியிடம் அவன் வரும் நேரத்தைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளான். எனவே தலைவன் புரவியை வேகமாக ஓட்டுகின்றான். தலைவி நேரம் தவறியதும் உயிர் துறந்துவிடுவாள் என்று விரைவாக வருகின்றான் என்ற விளக்கத்தினைக் கீழ்க் காணும் நூற்பாவிற்கு எடுத்தியம்புகிறார்.

**வினைவயின் பிரிந்தோன் மீண்டு வருகாலை**
**இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை,**
**உள்ளம் போல உற்றுழி உதவும்**
**புள்இயல் கலிமா உடைமையான**

(பொருளதிகாரம்-கற்பியல்-நூற்பா50)

## முதியோர் விருப்பம்

வாழ்க்கையின் இறுதிக் காலம் பற்றிக் காப்பியர் வரைவதை
வற்றாத நதியொன்று கடலில் கலப்பதோடு ஒப்பிடலாம் !

மலைகளில் தோன்றிக் காடுகள் கழனிகள் தாண்டி
ஆழியை அடையுமுன்னர் ஆயிரம் நன்மைகள் புரியும்...

இல்லற வாழ்வில் பயன்எல்லாம் பெற்றும் தந்தும் இறுதிக் கட்டத்தில் இருக்கும் முதியோர் தம் மக்கள் தம்முடன் சேர்ந்து இருக்கவும், உறவினர். இணைந்து இருக்கவும் அறத்தோடு வாழ விரும்புவர் என்ற விளக்கத்தினைக் கீழ்க்காணும் நூற்பாவிற்குத் தருகிறார்.

**காமம் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமம் சான்ற மக்களோடு துவன்றி**
**அறம்புரி சுற்ற மொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்தன பயனே**

(பொருளதிகாரம்–கற்பியல்–நூற்பா50)

## முடிவுரை

தமிழ் மொழிக்கெல்லாம் மூலம் என்றும், தமிழ் மொழியில் தோன்றிய முதல் இலக்கண, இலக்கிய நூல் என்றும் அனைவராலும் போற்றப்படக்கூடிய தொல்காப்பியம் காட்டும் மகளிர் மாண்புகளைத் தொல்காப்பியப் பூங்கா வழியாக இக்கட்டுரை புலப்படுத்தியுள்ளது.

---

# வாசகர் வாசகம் (1)

## செந்தமிழ் வாழ்த்து !

கம்பர்தம் கவித்துவத்தில் அறிவியல்சார்
கருத்தெல்லாம் மெய்யப்பர் விருந்தாய்த் தந்தார்
அப்புவியில் ஆசான்கள் மாசை நீக்கும்
அருங்கடவுள் ஈசனென்றார் மலைய மானே !
செம்மையுறு செவ்வியலைக் குறளில் காட்டிச்
சிறப்புவமை உருவகத்தைச் சொன்னார் மீனா
எம்மருங்கும் கலம்பகத்தில் பொருள் பரப்பி
ஏற்றம் செய் செந்தமிழாம் இதழை வாழ்த்து !

அன்புடன்,
**பாவலர் அறிவரசன்,** திருலோக்கி

# தமிழில் சுயமுன்னேற்ற நூல்களில் வாழ்வியல் சிந்தனையின் போக்கு

ஆ. பாப்பாத்தி
முனைவர் பட்ட ஆய்வாளர்

## முன்னுரை

தன்னம்பிக்கைச் சிந்தனைகள் குறித்த கருத்துருவாக்கம் அண்மைக் காலத்தில் பல்கிப் பெருகியுள்ளது. இன்றைய வாழ்க்கை முறையில் பல்வேறு சிக்கல்களை மனிதன் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவற்றை எதிர்கொள்ள தன்னம்பிக்கை இன்றியமையாததாக அமைகிறது. தமிழ்ச்சூழலைப் பொறுத்த மட்டில் பழங்காலந்தொட்டே பல நம்பிக்கைகள் நிலவிவந்துள்ளன. அவற்றுள் தன்னம்பிக்கைச் சிந்தனையின் போக்கு எவ்வாறு காணப்படுகிறது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வெளிக்கொணர்கிறது.

## நம்பிக்கையின் தோற்றம்

மனிதன் தனித்து வாழ இயலாது. தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்குப் பிறரைச் சார்ந்து வாழ வேண்டியுள்ளது. மற்றவரிடம் இருந்து பெறும்பொழுது அவரைப் பற்றிய நம்பிக்கை இயல்பாகவே உண்டாகிறது. இவை தவிர அச்ச உணர்வின் காரணமாகவும் நம்பிக்கை தோன்றியது. என்றாலும் இயற்கைக்கு அப்பாற்பட்டு நிகழும் சில நிகழ்ச்சிகளுக்கு அது காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவையே நம்பிக்கைகளாக உருவாகிக் காலங்காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறைக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

நம்பிக்கை என்பது ஒன்றின் உண்மையை ஏற்றுக்கொள்வதாகும். நம்பிக்கையின் அடிப்படையை மனிதனின் அகமனம் என்பர். மூளைக்கு அகமானது காரணக்காரியங்களுக்கு அப்பாற்பட்ட எண்ணங்களை உணர்த்துகிறது. மூளையில் பதியும் அவ்வெண்ணங்கள் உண்மையாகி உறுதிப்படும் போது நம்பிக்கையாகிறது. மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவு தரும் இந்நம்பிக்கைகள் மனித வாழ்வில் இன்றியமையாதது என்ற

ஜேம்ஸ்வின்செஸ்டரின் கருத்து நம்பிக்கை எப்படி உருவாகிறது என்பதை விளக்குகிறது.

நம்பிக்கை மனித வாழ்வின் உயிர்நாடி. யானையின் பலம் தும்பிக்கை. மனிதனின் பலம் நம்பிக்கை என்பார்கள். உலகம் ஓர் அச்சில் சுழல்வதைப்போல் நம்பிக்கையை மையமாக வைத்தே உலக மாந்தரினம் இயக்கம் பெறுகிறது. சமூகத்தில் நிலவும் நம்பிக்கையைப் போலவே தனிமனிதனது நம்பிக்கையும் வளர்ந்து வருகிறது. அதனோடு தன்னம்பிக்கை சேருகின்றபோது சாதனையாளனாக மனிதனை மாற்றுகிறது. தன்னைத்தான் உணர்ந்து கொள்ள முற்படுகிறபோது தன்னைப் பற்றிய திறன் வெளிப்படுகிறது. அதைப் பொருத்தே ஒரு செயலில் மனிதன் ஈடுபடுகின்றான்.

## பழங்கால நம்பிக்கைகள்

நம்பிக்கையின் அடிப்படையில் தான் மனித வாழ்க்கை இயங்குகிறது. சில நம்பிக்கை தொன்று தொட்டு இன்று வரை நிலவுகிறது. இதனை.

*பாக்கத்து விரிச்சி* (தொல்.பொருள். நூ. 58)

என்ற தொல்காப்பிய நூற்பா வெளிக்காட்டுகிறது. ஒரு செயலைத் தொடங்கும் போது நற்சொல் கேட்பது மக்களின் வழக்கில் காணப்படும் நம்பிக்கையாகும். மேலும் பல நம்பிக்கைகள் பழங்காலந்தொட்டே நிலவி வந்துள்ளன. நற்குறி கேட்டலில் பல்லி சகுனம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

*பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி*
*நல் கூறு என நடுங்கி* (அகம்.பா. 289)

*நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கிற் றேற்றும்* (நற்.பா.246)

என்ற சங்கப் பாடல்கள் பல்லி சகுனம் பற்றிய நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. மேலும் பெண்களுக்கு இடது கண் துடித்தால் நல்லவை நிகழும் என்பது மக்களிடையே நம்பிக்கையாக நிலவி வந்ததையும் குறிப்பிடுகின்றன.

நம்பிக்கைகள் இயற்கை பற்றிய நம்பிக்கை, கடவுள் பற்றிய நம்பிக்கை, பிறப்பு இறப்பு பற்றிய நம்பிக்கை, மூடநம்பிக்கை, நன்னம்பிக்கை, அதீத நம்பிக்கை, தன்னம்பிக்கை எனப் பல

வகைப்படுகின்றன. நம்பிக்கையின் விளைவுகள் நல்ல பயனைத் தருவதாகவோ, அல்லது தீயனவற்றைத் தருவதாகக் கூட அமையலாம். நம்பிக்கை என்ற சொல் பெரும்பாலும் தன்னம்பிக்கையைக் குறித்தாலும் அது ஒரு பொதுச் சொல்லாகவே கொள்ள வேண்டும். தன்னம்பிக்கைச் சிந்தனையின் போக்கு தமிழில் எவ்வாறு காணப்படுகிறது என்பதை இனி ஆராயலாம்.

தன்னம்பிக்கை காரியங்கள் கூறப்பட முடியாத தீய விளைவுகளை உண்டாக்குகின்றவற்றின் மீது கொள்ளும் நம்பிக்கை மூடநம்பிக்கையாகிறது. நல்ல விளைவுகளை உண்டாக்குகின்றவற்றின் மீது கொள்ளும் நம்பிக்கை நன்னம்பிக்கையாகிறது. உறுதியில்லாத சோர்வு கொண்ட மனநிலையை மாற்றி செயல்களில் வெற்றி பெறுவதற்குத் தன்னம்பிக்கை தேவையாகிறது.

ஒருவனின் தன்னாற்றல், திறமை மற்றும் கருத்தின் மீது வைக்கும் நம்பிக்கையும் அவன் தன் மீது வைக்கும் நம்பிக்கையுமே தன்னம்பிக்கை எனப்படும்.

**அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு**
**ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய**
**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவன் ஆக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைகஎன் நிலவரை** ....... (புறம் - 72)

என்ற புறநானூற்றுப் பாடல் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டிய நெடுஞ்செழியனுடைய தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும். இதைப் போலவே காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள் பலவற்றிலும் தன்னம்பிக்கைக்கான கூறுகள் காணப்படுகின்றன.

தன்னம்பிக்கை என்பதற்குத் தன்னால் முடியும் என்னும் மன உறுதி, தன்மீதே கொண்டிருக்கும் நம்பிக்கை என்று கிரியா தற்காலத் தமிழ் அகராதி பொருளுரைக்கிறது. தன்னம்பிக்கை என்பது உளவியல் சார்ந்த ஒரு கூறு என்றும் கூறப்படுகிறது.

நீங்கள் பலவீனமானவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தால் நீங்கள் பலமற்றவர்களாகவே ஆகிவிடுவீர்கள். நீங்கள் பலம் பொருந்தியவர்கள் என்று எண்ணினால் பலமுடையவர்களாகவே ஆகிவிடுவீர்கள் என்பதில் தன்னம்பிக்கை சார்ந்த செயல்பாடு உள்ளத்திலிருந்து தொடங்குகிறது என்ற கருத்து பெறப்படுகிறது. இந்தக் கருத்தை வலியுறுத்தும் விதமாக எம்.ஆர். காப்மேயரின், உங்களால் எது முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களோ அதன் விளைவாகவே உருப்பெறுகிறீர்கள் என்ற கூற்றும் அமைகிறது.

போட்டியும் போராட்டங்களும் நிறைந்த இன்றைய வாழ்க்கைச் சூழல், அரசியல் நிலை, ஊழல், இலஞ்சம், வேலைவாய்ப்பின்மை போன்றவை வாழ்க்கையின் மீது அவநம்பிக்கைகளை உண்டாக்குகின்றன. இவை பெருமளவில் இளைய சமுதாயத்தினரிடையே எதிர்மறையான சிந்தனையைத் தூண்டி தவறான பாதைக்குச் செல்ல வழிகோலுகின்றன.

எனவே இன்றைய இளைய சமுதாயத்தினரிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களுக்கு வாழ்க்கையின் மீது பிடிப்பினை உண்டாக்க பலரும் முயற்சியினை மேற்கொண்டு வருகின்றனர். தன்னால் முடியும், சாதிக்க இயலும் என்ற எண்ணம் தோன்றுகின்றபோது ஒருவன் தன்னம்பிக்கையுடையவனாக மாறுகிறான்.

வேறு எந்தச் செல்வத்தையும் விட தன்னம்பிக்கைதான் சிறந்த செல்வமாக விளங்குகிறது. இதைப் பிரதிபலிக்கும் விதமாக டாக்டர் வாசவன் தன்னம்பிக்கைதான் மூலதனம். இந்த மூலதனத்துடன் பிறந்திருக்கும் நீ எவ்வளவு பெரிய செல்வந்தன். நாடு தன்னம்பிக்கையை தேடு ! ஊக்கத்தை ஓடு உழைப்பை நோக்கி என்று மொழிகிறார்.

முதலில் தேவையான நம்பிக்கையை மனதில் உருவாக்கிக் கொள்ளுங்கள். எவருக்குமே பிறந்த அளவில் நம்பிக்கை தோன்றி வளர்ந்து விடுவதில்லை. எவரெல்லாம் நம்பிக்கையை முகத்தில் பிரகாசிக்க நடந்து கொள்கிறார்களோ, எவரெல்லாம் கவலைகளை விட்டொழிக்கிறார்களோ எங்கும் எந்தச் சூழலிலும் வெற்றி வாகை சூடி வருகிறார்களோ, அந்த

நம்பிக்கையை அடைந்தவர்கள் தாம்... என்று நம்பிக்கையாளர்களின் வெற்றி பற்றி டேவிட் ஜே. சுவார்ட்ஸ் என்பவர் கூறுகிறார்.

நம்பிக்கை என்பது தன்னுடைய ஆற்றல் மீது மதிப்பு வைக்கின்ற ஊக்கத்தின்கண் ஊற்றெடுப்பது. தன்னால் இயலும் என்கிற எண்ணத்தை ஏற்படுத்தி செயல்படுகின்ற உற்சாகத்தை ஊட்டுவது, நம்பிக்கை இருப்பவர்களே மகத்தான மனிதர்களாக மாறியிருக்கிறார்கள். என்னால் முடியும் என எண்ணுவது நம்பிக்கை எனலாம்.

நான் அறிவிலியல்ல என்று நினைப்பது நம்பிக்கை. நம்பிக்கை முயற்சியுடனும் உழைப்புடனும் நட்பு வைத்திருக்கின்ற மேன்மையான பண்பு, தன்னம்பிக்கை உள்ளிருந்து புறப்படும் ஒரு மாபெரும் சக்தி. அது உள்ளவர்களை அவர்களது பேச்சின் மூலம் உடனே அறிந்து கொண்டு விடலாம் என்று இறையன்பு குறிப்பிடுகிறார்.

வாழ்க்கையினுடைய உயிர்த்துடிப்பு ஆணிவேர் தன்னம்பிக்கைதான். தன்னம்பிக்கை உள்ள மனிதன் வாழ்க்கையின் கடைசி நிமிடம் வரை போராடுகிறான். ஒரு நிறைவோடு வாழ்கிறான். தன்னம்பிக்கைதான் மனிதனை வாழ்விக்கிறது. தன்னம்பிக்கை ஏற்படும் போது மனிதன் தன் லட்சியங்களுக்கு ஏற்ப சாதனை புரிகிறான். நம்பிக்கை உண்டாவதற்கு நமது எண்ணங்களே முக்கிய காரணமாக அமைகிறது. எண்ணங்கள் குறிக்கோள்களையும், இலட்சியங்களையும் உண்டாக்குகின்றன.

எண்ணம் திரும்ப திரும்ப எழும்போது மனதில் அது நம்பிக்கையாய் வேர்விடுகிறது. எனவே தன்னம்பிக்கை உண்டாவதற்கு மனிதனது எண்ணங்கள், சிந்தனை, முயற்சி, செயல்பாடு ஆகிய அனைத்தும் காரணமாக அமைகிறது. இவ்வாறாகத் தன்னம்பிக்கைச் சிந்தனையின் போக்கு தமிழில் சமூகத்தில் இளைய சமுதாயத்தினரிடையே ஒரு மாற்றத்தை உண்டாக்கி, அவர்களிடையே நம்பிக்கையைத் துளிர்விடச் செய்வதற்குத் தமிழ்வாணன், எம்.எஸ். உதயமூர்த்தி, மெர்வின், வெ. இறைய்ன்பு ஆகியோரின் எழுத்துக்கள் முயல்கின்றன.

# வினாவிடை

ஆறுவிரல் ஐம்பொறி

செந்தமிழ் மொழியில் உள்ள சில கருத்துக்களை யான் தெரிவிக்க விரும்பியதன் விளைவே இவ்வினாக்களும் விடைகளும்.

**வினாக்கள்**

1. தமிழ் அகராதியில் இறுதிச் சொல் எது?
2. ஐந்து நெடில் எழுத்துக்கள் தொடர்ந்து வரும் சொல் எது?
3. ஒரு மாத்திரை கால அளவை நான்காகப் பிரிக்கும் செய்யுள் எது?
4. சென்று பற்றும் பொறி எது?
5. பசு ஆண்பாலா? பெண்பாலா?
6. சொல்லுக்கு முதலில் மட்டுமே வந்து இடையிலும் கடையிலும் வராத எழுத்து எது?
7. ஓர் நாட்டை ஒரு அரசன் ஆண்டான், இத்தொடரில் உள்ள தவறுகள் எவை?
8. அஃது மெய்யெழுத்து, அது உயிரெழுத்து, இத்தொடர்களில் உள்ள தவறுகள் எவை?
9. படிக்கும்போது உதடுகள் ஒட்டாத ஒரு திருக்குறள் எது?
10. படிக்கும்போது உதடுகள் ஒட்டாத வெண்பா எது?
11. முதலீறாகப் படித்தாலும் ஈறு முதலாகப் படித்தாலும் (விகடகவி) ஒன்றாக அமையும் குறள் வெண்பா எது?
12. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று சொற்களும் அமைந்துள்ள 2 குறட்பாக்கள் எவை?
13. ஒற்றெழுத்து நீங்கலாக 19 எழுத்துக்களே உள்ள 2 குறட்பாக்களைக் கூறுக.
14. பத்துக் குறட்பாக்களிலும் ழகர வர்க்க எழுத்துக்கள் உள்ள அதிகாரம் எது?
15. பத்துக் குறட்பாக்களிலும் ஆய்த எழுத்துக்கள் உள்ள அதிகாரம் எது?
16. இரு பறவைகள் உள்ள ஒரு குறட்பா எது?
17. திருவள்ளுவர் மூன்று என்ற எண்ணையே விரும்புவார். எப்படி?
18. திருக்குறளில் மூன்று பறவைகள் உள்ள அதிகாரம் எது?
19. முதலடி நான்கும் மூவசைச் சீராக அமைந்துள்ள குறட்பா ஒன்றைக் கூறுக.
20. எட்டேகால் லட்சணம் என்றால் என்ன? எப்படி?

## விடைகள்

1. வௌவுதல், 2. ஆகையாலேதான் 3. நன்னூல் 100ஆம் நூற்பாவின் உரைச் செய்யுள் உன்னல் காலே ஊன்றல் அரையே முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே. 4. கண் 5. இரண்டும் அன்று, ஒன்றன்பால். 6. ஔ. 7. ஒரு நாட்டை ஓர் அரசன் ஆண்டான் 8. அது மெய்யெழுத்து. அஃது உயிரெழுத்து. 9. எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே செய்தற் கரிய செயல். குறள் - 489. உ,ஊ,ஒ,ஓ,ஔ,ப,ம,வ இவை உதடுகள் ஒட்டும் எழுத்துக்கள். இவ்வெழுத்துக்கள் இக்குறளில் இல்லை. உஊஒ ஓஔ பமவ விவற்றியைபு சேராநி ரோட்டத் திறத்து என்பது தண்டியலங்காரத்தில் 237ஆம் பக்கத்தில் உள்ள நூற்பா.

10. சீலத்தான் ஞானத்தாற் றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தா லாராத காதலான் – ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாய்
கச்சிக்கச் சாலைக் கனி. - இவ்வெண்பாவிலும் உ,ஊ,ஒ,ஓ,ஔ,ப,ம,வ ஆகிய எழுத்துக்கள் இல்லை. - இச்செய்யுள் தண்டியலங்காரத்தில் 236ஆம் பக்கத்தில் உள்ளது.

11. நீவாத மாதவா தாமோகு ராகமோ
தாவாத மாதவா நீ – இச்செய்யுள் தண்டியலங்காரத்தில் 226ஆம் பக்கத்தில் உள்ளது.

12. அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறத் தெரிந்து தேறப் படும் – குறள் 501
அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

13. 1. தீயவை தீய பயத்தலால் தீயவை 2. இன்மை என ஒரு பாவி மறுமையும் தீயினும் அஞ்சப் படும். குறள் - 202. (இன்மையும் இன்றி வரும். குறள் - 1042)

14. ஒழுக்கமுடைமை (14) 15. வெஃகாமை (18)

16. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது குறள் – 481

17. பால் – 3. இயல் – 13. அதிகாரம் – 133. சீர் – 9310

18. காலமறிதல் – 49.

19. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான் குறள் – 827

20. அவலட்சணம் அ–8 வ – 1/4

# மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்துச் சுவடிகள் - சிந்தனைத் துளிகள்...

பாலவநத்தம் ஜமீன்தாரான வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் 14.09.1901இல் மதுரைத் தமிழ்ச்சங்கம் தொடங்கப் பெற்றது. 15.09.1901 அன்று பாண்டியன் புத்தக சாலை உருவாக்கப் பெற்றது. ஓலைச் சுவடிகளைத் தொகுப்பதும் அவற்றை ஆராய்ந்து வெளியிடுவதும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் முதன்மையான பணிகளுள் ஒன்றாகும்.

ஓலைச் சுவடிகளைத் தேடுவதற்கும், பரிசோதிப்பதற்கும் தனித்தனிப் புலவர்கள் சங்கத்தில் இருந்தனர். தமிழ்ச் சங்கத்தின் பதிப்புப் பணிகளுக்காக முத்திரா சாலை என்ற அச்சகம் நிறுவப் பெற்றது. செந்தமிழ்ப் பிரசுரம், தமிழ்ச்சங்கப் பிரசுரம் என்று இருவகை பிரசுரங்கள் இருந்தன.

ஓலைச் சுவடிகளில் கிடைக்கப் பெற்ற இலக்கண, இலக்கியங்கள் நுணுகி ஆராயப்பட்டு செந்தமிழ் இதழில் வெளிவந்தன. செந்தமிழ் இதழில் வெளிவந்து, பிறகு தனி நூலாக மீண்டும் வெளியிடப் பெற்றவை செந்தமிழ்ப் பிரசுரமாகும்.

நேரடியாகவே வெளியிடப் பெற்றவை தமிழ்ச் சங்கத்துப் பிரசுரமாகும்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தற்போது 278 அரிய ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 21 சுவடிகள் சமஸ்கிருத மொழியிலும், ஒன்று தெலுங்கு மொழியிலும் எழுதப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தொல்காப்பியம், நன்னூல், தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம், நேமிநாத விருத்தி, இறையனார் அகப்பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பருங்கலம், காரிகை, தண்டியலங்காரம் முதலிய இலக்கண ஏடுகள் உள்ளன.

திவாகரம், ஆசிரிய நிகண்டு, சேந்தன் திவாகரம் முதலான நிகண்டு ஏடுகளும், சிதம்பரப் பாட்டியல், நவநீத பாட்டியல் முதலான பாட்டியல் ஏடுகளும் உள்ளன. தட்சிணாமூர்த்தி கலைக்களஞ்சியம், தல புராணங்கள், மருத்துவச் சுவடிகள், கதைப் பாடல்கள், பக்தி, நீதி, சிற்றிலக்கியங்கள், யோக சுவடிகள், ஜோதிட சுவடிகள் என்னும் பல வகைமைகளைச் சார்ந்த சுவடிகள் இங்குள்ளன. அரிய ஓலைச் சுவடிகள் வேதிப்பொருள்களிட்டு, பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் ஆய்வாளர்களும், பேராசிரியர்களும் உள்நாட்டு, வெளிநாட்டைச் சார்ந்த ஆர்வலர்களும் ஓலைச் சுவடிகளைப் பார்வையிட்டுள்ளனர்.

**முனைவர் மு. மீனா**
செந்தமிழ்க் கல்லூரி

# உடம்படுமெய்கள் - உடம்படா வாதங்கள் 2

புலவர் சா. பன்னீர்செல்வம்
பட்டுக்கோட்டை

செந்தமிழ் - அன்பர்கள் அருள் கூர்ந்து, செந்தமிழ் இதழ்கள், செப்டம்பர், அக்டோபர் - 2012, பிப்ரவரி, மே - 2013 ஆகிய நான்கையும் உடன் வைத்துக் கொண்டு இக்கட்டுரையைப் படிக்க வேண்டுகிறேன்.

1. செப்டம்பர் - 2012 இதழ், பக்கம் 11, 12 இல், "நம் மொழியில் கூட அளபெடைகளில் குடிதழீஇ, கொடுப்பதூஉம், போஒய்ப் பெறுவதெவன்? என்றெல்லாம் தேவையெழுகிற போது நெடில், குறில் உயிர்கள் அடுத்தடுத்து அமைந்து உடம்படுமெய் இன்றி மூன்று மாத்திரையாகி நீண்ட ஒலி - யெழுத்துக்கள் இடம் பெறுவது ஈண்டு கருதத்தக்கது" என்னும் கருத்துரைக்கு மறுப்பாக,

அளபெடை என்பது அவ்வவ்வெழுத்திற்குரிய மாத்திரை நீட்டி ஒலிக்கப்படுதலன்றி, உயிர்கள் அடுத்தடுத்து நிற்றலன்று. தழீஇக் கோடல் என்பதில், ழீ - என்பதன் ஈகாரம் அதற்குரிய இரண்டு மாத்திரையினும் கூடுதலாக மேலுமிரண்டு மாத்திரையளவு நீட்டியொலிக்கப்படுதலன்றி, தழீ-இ-இ என இகரங்கள் அடுத்தடுத்து ஒலிக்கப்படுவதல்ல. அவ்வாறொலிப்பார் பொருளறிவாரா மழலைய ரென்க'' - என விளக்கமளித்தேன் - பிப்ரவரி 2013. இதில் தவறென்ன? இங்கே நடைபெறும் விவாதம் அளபெடையால் பொருளழுத்தம் கூடுகிறதா - குறைகிறதா என்பதல்ல. அளபெடையில் வெவ்வேறான இரண்டு உயிர்கள் அடுத்தடுத்து நிற்றலாகக் கொள்ளுதல் சரியா என்பதே ஈண்டைய விவாதமாகிறது. தழீஇ-என எழுத்தில் எழுதும் போது ழீ என்பதையடுத்து இகர வடிவம் குறித்தல், ழீ - என்பதன் ஈகாரத்தை இரண்டு மாத்திரைக்கும் மேலாக நீட்டியொலிக்க வேண்டும் என்பதற்கான குறியீடேயன்றி, கழீ - இ - என, நெடிலும் குறிலுமாக ஒலித்தல் குழந்தைத்தனம் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன். மாணவன் கொடுப்பதூ-உம் எனப் படிக்கும் போது, அவனைத் தடுத்து கொடுப்பதூ...ம் - என நீட்டியொலிக்குமாறு பழக்கப்படுத்துபவரே தமிழாசிரியர் எனத்தக்கவர். அல்லாதார் வேறு வேலைக்கு அனுப்பத்தக்கவர். ஆக, அளபெடையில் நெடிலும் குறிலும் அடுத்தடுத்து நிற்றலாகக் கருதுதலும், அவ்வாறாகப் படித்தலும் பேதைமை என்பதில் யாதொரு மாற்றமுமில்லை.

2. தமிழில் இரண்டுயிர்கள் இணைந்தொலித்தல் இல்லவேயில்லை. நிலைமொழியிறுதி – வருமொழி முதல் என உயிர்கள் எதிர்நிலையாகும் போது இணைந்தொலிக்க மாட்டாத உயிர்களை இணைந்தொலிக்கும் படியாக உடம்படுத்துவதே உடம்படுமெய் என்னும் அடிப்படைத் தெளிவுடன் பிற மொழி குறித்த ஒப்பாய்வில் தலைப்படலே பயன் தருவதாகும்.

ஆங்கிலத்தில் ஒரே சொல்லில் ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்கள் அடுத்தடுத்து நிற்றல் அருவழக்கன்று; பெருவழக்கு - என்பது எனது கருத்துரை. (பிப்ரவரி 2013 – செந்தமிழ் இதழ்.)

இங்கே நடைபெறும் விவாதம் தமிழ் – ஆங்கில உடம்படுமெய் பற்றியது. உடம்படாத – இணைந்தொலிக்க மாட்டாத உயிர்களை இணக்கப்படுத்துவதே உடம்படுமெய் எனப்படுவது. எனவே உயிர்கள் இணைந்தொலித்தல் என்னும் அடிப்படையான நிலைப்பாட்டில், தமிழ் – ஆங்கில மொழி மரபுகள் எத்தன்மையவாகின்றன எனும் ஒப்பாய்வின்றி, உடம்படுமெய் பற்றி விவாதித்தல் கண்பார்வை உடையோன், அஃதிலான் எனும் இருவரின் கிட்டப்பார்வை, எட்டப்பார்வை பற்றி ஒப்பாய்வு செய்யும் கேலிக் கூத்தன்றி வேறல்ல.

அய்ரோப்பிய அமெரிக்கப் பெண்கள், பலர் காணும் நிலையிலும் கணவன் அல்லது காதலனுடன் முத்தமிட்டுக் கொள்ளுதல் இயல்பான நிகழ்வுகளாகின்றன. ஆனால், தமிழ்ப் பெண் எவளும் அத்தகு செயலுக்கு உடன்பட மாட்டாள் எனச் சொல்லும் போது, அய்யகோ – இவன் தமிழ்ப் பெண்களைக் கேவலப்படுத்துகிறான் எனப் புலம்புவாருண்டோ?

3. அடுத்து, நிலைமொழியிறுதியும், வருமொழி முதலும் உயிராகுங்கால், வருமொழி முதலுயிர் கெட்டு முடிதலும் உண்டு. மரத்தை என்பதை, மரம் + அத்து + ஐ எனக் கொண்டு, மரம் என்பதன் மகர ஒற்றுக்கெட்டு, மர அத்து ஐ என நிற்க, மர அத்து என்பவற்றில் வருமொழி முதலாகும் அகரங்கெட்டு மரத்தை என முடிவதாகக் கொள்கிறார் ஆசிரியர் – என்பது எனது கட்டுரைக் கருத்து (பிப்ரவரி 2013., செந்தமிழ் இதழ்)

நிலைமொழியிறுதியும், வருமொழி முதலும் உயிர்களாகுங்கால் வருமொழி முதலாகும் உயிர் கெட்டு முடிதலும் உண்டென்பதை,

அத்தின் அகரம் அகர முனை இல்லை – தொல். எழுத்து. 126

இக்கின் இகரம் இகரமுனை யற்றே – 127

ஆறன் உருபின் அகரக் கிளவி

ஈறா ககரமுனைக் கெடுதல் வேண்டும் – 116

என விதி வகையாகவும்,

மேற்கிளந்தன்ன.........331

முற்கிளந்தன்ன...........633

என உடம்படு புணர்த்தலாகவும் தெளிவுறுத்துகின்றார் ஆசிரியர். பேச்சு வழக்கு மட்டுமே கொண்டு இலக்கணம் வகுத்த பேதையரோ தொல்காப்பியர்? தொல்காப்பியம் செய்யுள் வழக்காகாதா? ஈதென்ன கொடுமை?

மேற்கிளந்தன்ன – மேல் கிளக்கப்பட்ட அத்தன்மைத்து, முற்கிளந்தன்ன – முன்னர் கிளைக்கப்பட்ட அத்தன்மைத்து என்றன்றி வேறு வகையாகப் பொருள்படுத்தல் ஒல்லுமோ? கற்றதனால் – குறள் : 2; நாடிழந்ததனினும் – புறம் : 165 என்பவற்றை, கற்ற அதனால், நாடு இழந்த அதனினும் என்றன்றி வேறுதிறமாக இயைபுபடுத்தல் யாங்ஙனம்? தவத்தொடு – குறள் : 295, மரத்தனையர் – குறள் 576 என்பவற்றில் அத்தின் அகரம் அகரமுனைக் கெடுதல் செய்யுள் வழக்காகாதா?

ஆக, நிலைமொழியிறுதி உயிர்முன் வருமொழி முதலுயிர் கெட்டு முடிதல் மக்கள் வழக்கு, செந்தமிழ்ச் செய்யுள் வழக்கு இரண்டிற்கும் உரியதென்பதில் முரண்டு பிடிக்க வழியில்லை.

4. அடுநை, விடுநை, விடுநர், கூறுநர், செறுநர், பொருநர், அறிஞர், இளைஞர், களைஞர், வலைஞர், வினைஞர் என்றாற்போலும் பழந்தமிழாட்சிகளை நோக்க, யகர – வகரங்களேயன்றி, ஞகர – நகர மெய்களும் உடம்படு மெய்யாதல் தமிழ் மரபில் உண்டென்பது தெளிவாகின்றது. இவற்றை உடம்படு மெய்யல்லாத பிறவாகக் கொள்ளுதற்குரிய விதி தொல்காப்பியத்தில் யாண்டுமில்லை. ஞர், நர் – என்பவற்றைப் பெயர், அல்லது வினை விகுதிகளாகக் கொள்ளுதற்கும் தொல்காப்பியத்தில் இடமில்லை. இவ்வாறாக உடம்படுமெய் பலவாதலும், யகர, வகரங்களைத் தவிர்த்துப் பிறவற்றை வகைப்படுத்துதல் அரிதாதலும் எண்ணியே ஆசிரியர்,

உடம்படுமெய்யின் உருபுகொளல் வரையார் என்றளவில் நின்று கொண்டார். இந்நுட்பமுணரமாட்டாத பவணந்தியார், உடம்படுமெய்கள் யாவை என விதந்தோத முற்பட்டு, யகர வகரங்களை மட்டும் வரைந்தோதியமை குன்றக் கூறலென்னும் குற்றமென்க - என்பது எனது கருத்துரை (பிப்ரவரி 2013, செந்தமிழ் இதழ்)

உடம்படு மெய்களாவனவற்றுள், யகர வகரங்களை மட்டும் கூறி, ஞகர - நகரங்களை விடுத்தவர் பவணந்தியார் என்பது தெள்ளத் தெளிவாயிருக்க, நான் தொல்காப்பியரைக் குறைகூறுவதாகக் குற்றப்படுத்துதல் எற்றென்றெள்ளற்குரியது?

5. கூறுநர், பொருநர், அறிஞர், இளைஞர் - என்றினையவாகும் சொல்லாட்சிகள் தொல்காப்பியத்திலும், சங்கப் பாடல்களிலும் பெருவழக்காயிருக்க, பவணந்தியார் அவற்றை விடுத்தமை குன்றக் கூறலென்னும் குற்றமன்றி வேறென்ன? மொழி மரபுகளை வகைப்படுத்தும் இலக்கண நூலியற்ற முனையும் ஆசிரியன், வழக்கும், செய்யுளுமாகும் மொழி மரபுகளைத் தானே நுணுகியாராய்ந்து நூலியற்றற்பாலன். உரையாளர் கூறியதையே நூற்பாவாக்குதல் இலக்கண ஆசிரியன் என்னும் தகுதிக்குத் தக்கதன்று.

உடம்படுமெய் தொடர்பாக ஞகர, நகரங்களை இணைத்தோதாமை மட்டுமின்றி, இன்னொரு குறையும் சேர்கின்றது. நன்னூலின்படி, தலை + அன் – தலையன் எனல் சரி; தலைவன் எனல் எப்படி? இறைவன், கிணைவன் – புறம் : 379 – தலைவன், துறைவன், முனைவன், தலைவி, மனைவி – என்றினையவாகும் சொல்லாட்சிகள் தொல்காப்பியத்திலும், சங்கப் பாடல்களிலும் அருவழக்கன்று; பெருவழக்கு என்பதில் மறுப்புளதோ? ஆக, ஐ + உயிர் என்னுமிடத்து வகர உடம்படு மெய்யும் இடம் பெறுகின்றது. அங்ஙனமாகவும் பவணந்தியார் இஈஐமுன் யகரமும், ஏனை உயிர்முன் வகரமும் தோன்றுமெனக் கூறியமை குன்றக் கூறலென்னும் குற்றமென்பதில் குண்டூசி முனையளவும் மாற்றமில்லை.

6. உடம்படுமெய் பெறலாகும் நிலைமொழி வருமொழியிரண்டும் தனித்துப் பொருள்தரும் சொற்களாதலே உடம்படுமெய்யின் அடிப்படையென்னும் கருத்துரை முற்றும் மயக்கவுரையென்க.

நிலைமொழியிறுதியும், வருமொழி முதலும் உயிர்களாக அமையுங்கால் அவற்றை விட்டிசையின்றி இணைந்தொலிக்கச் செய்தல் -

உடம்படாத உயிர்களை உடம்படுத்துதல் என்பதுதான் அடிப்படையே யன்றி, நிலைமொழியும், வருமொழியும் பெயரா – வினையா – இடையா – தொடையா – தனித்து நிற்பதா – கூட்டணி அமைப்பதா என்பன அடிப்படையல்ல" என்பது எனது கருத்துரை (பிப்ரவரி 2013, செந்தமிழ் இதழ்)

அஃதாவது, மணி + அடி = மணியடி; மணி + அழகு = மணியழகு என்றாற் போல உடம்படுமெய் பெறலாகும் நிலை மொழி வருமொழியிரண்டும் தனித்துப் பொருள்தரும் பெயர் – வினைகளாகத்தான் இருக்குமென்னுங் கடப்பாடில்லை. அ + அன் = அவன்; தலை + அன் = தலைவன் என்றாற்போல, தனித்துப் பொருள்தரமாட்டாத இடைச் சொற்களும் உடம்படுமெய் பெறும் என்பதே எனது கருத்துரையாகின்றது. இதனில் திருத்தத்திற்கும் வருத்தத்திற்கும் ஏதுமில்லை. இடைச்சொற்கள் தனித்துப் பொருள்தர மாட்டாதவையாயினும், அவை பெயருடனும், வினையுடனும் சேரும் போது தத்தமக்கெனப் பொருளுடையவாகின்றன என்பதற்குத்தான் அவன், தலைவன் என்பவற்றைச் சான்று காட்டினேன். தாம் கூறியதை நான் கூறியதாகக் கொண்டுரைத்தல், நகையாகின்றது.

இன், வற்று, அத்து, அம் – என்றாற் போலும் சாரியைகளும், அன், ஆன், அள், ஆள் – என்றாற்போலும் விகுதிகளும் பிறவுமாகும் இடைச்சொற்கள் அனைத்தும் பெயர் வினை சார்ந்தல்லது. தனித்தியங்குதலும், தனித்துப் பொருள் தருதலும் இல்லாதன என்பது நான் கூறுவதல்ல, ஆசிரியர் தொல்காப்பியர் கூறும் நல்லுரை யென்பதைத் தொல்காப்பியத்தை ஒருமுறை புரட்டிப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

மீண்டும், மீண்டும் திரும்பத்திரும்பக்கூறுகிறேன், முதலாவது, தொல்காப்பியத்தைக் கவனமாகப் படிக்க வேண்டும். இரண்டாவது மற்றவர்களின் கருத்துரைகளைக் கேட்கும் போதும் படிக்கும் போதும் கவனமாகக் கேட்க வேண்டும்; கவனமாகப் படிக்க வேண்டும்; கவனமாகச் சிந்திக்க வேண்டும்; கவனமாகப் பதிலிறுக்க வேண்டும். பட்டுக்கோட்டைக்கு வழியிதுவல்ல என்றால், என்ன – கொட்டைப்பாக்கு என்றொன்று இல்லை யென்றா சொல்கிறாய்; எங்கள் வீட்டுத் தோட்டத்தில் கொத்துக் கொத்தாய்க் காய்த்துத் தொங்குகிறதே எனல் என்னெனத் தகும்?

# பூவும் பாவும்

புலவர் கி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

பூ என்னும் பெயரை, மரனொடு வரூஉம் கிளவி எனத் தொல்., பொருள், மரபியல் நூற். 89 அறிமுகம் செய்கிறது ! சங்க காலம் தொட்டே, பூக்கள் மக்களின் வாழ்வியலோடு ஒன்றித் திகழ்ந்தன. நானிலத்தை, ஐவகையாகப் பாகுபடுத்திய நம் முன்னோர், அந்நிலம் சார்ந்துச் சிறந்து விளங்கும் பூவின் பெயரை, அடையாளமாகச் சார்த்தி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் மற்றும் பாலை நிலம் என வழங்கிய நுண்மாண் நுழைபுலம், எண்ணி எண்ணி, மகிழ்ந்து போற்றத்தக்கது.

நாடுகாக்கும் போர்கூட, அறநெறிக்குட்பட்டே திகழ்தல், விழைந்த முன்னோர், இலக்கணம் வகுத்தளித்த போதும், பூ சிறப்பிடம் பெற்றுத் துறையின் பெயராகவே நின்று, இன்றும் பாவில் மணக்கின்றது :

வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்;
வட்கார்மேல் செல்வது வஞ்சியாம்; உட்காது
எதிர்ஊன்றல் காஞ்சி, எயில்காத்தல் நொச்சி;
அதுவளைத்த லாகும் உழிஞை, அதிரம்
பொருவது தும்பையாம்; போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம் ! - புறப்பொருள் வெண்பாமாலை

அரசர்க்குரிய பத்தினுள், பூக்களின் அணிவகுப்பாய் மணக்கின்ற நாரும் ஒன்றாகுமெனத் தொல்காப்பியர் மரபியல் நூற். 72 வழி, கருத்துக்கொடை நல்கும் போது, நம் மனம் வியப்பால் விரிகின்றது.

படையும், கொடியும், குடையும், முரசும்,
நடைநவில் புரவியும், களிறும், தேரும்,
தாரும், முடியும், நேர்வன பிறவும்,
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய !

இத்தகைய சிறப்புகள் கோலோச்சும் பூ மணக்கும் பாக்கள் பலவற்றை, இக்கட்டுரைவழி பகிர்ந்து மகிழ்வோம்!

கைகாள் கூப்பித் தொழீர் –
கடிமாமலர் தூவிநின்று – தேவாரம்

## பரமனைப் பாடும் பாவும், பூவும்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் – திருவள்ளுவர்

கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை.....
நினைமின் மனனே! – பட்டினத்தார்

காயமலர் நிறவா, கருமுகில்போலுருவா...........

– பெரியாழ்வார் திருமொழி.

............. போழ்வாய் வாளை,
நீர்நணிப் பிரம்பின் நடுங்குநிழல் வெரூஉம்
நீத்துமை நெடுங்கயம் தீப்பட மலர்ந்த
கடவுள் ஒண்பூ ...... – பெரும்பாண். 287 – 290

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே – திருநாவுக்கரசர்

பூவினில் வாசம் புனலிற்பொற்புப்
புதுவிரைச் சாந்தினின் நாற்றத்தோடு
நாவினிற் பாடல்நள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய் – திருஞானசம்பந்தர்

கரும்பார் விண்மலர் அவைதாவித் தூங்குகண்ணீர்
அரும்பா நிற்குமனத் தடியாரொடும் அன்புசெய்வன்

விரும்பேன் உன்னையல்லால் ஒருதெய்வம் என் மனத்தால்
கரும்பா ருங்கழனிக் கழிப்பாலை மேயானே! — சுந்தரர்

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்கு மிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே!
– மாணிக்கவாசகர்

மத்தள வயிறனை, உத்தமி புதல்வனை,
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே! – அருணகிரிநாதர்

வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்கஎன்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோ,? – குமரகுருபரர்

கமலந்தனி லிருப்பாள் விருப்போடு – கம்பர்

செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து, ஆம்பல்வாய் கூம்பினகாண்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை........ மலர்மார்பா....
பூவைப்பூ வண்ணா..... பொற்றாமையடி – ஆண்டாள் திருப்பாவை
புதுப்பூங்கடம்பு(ம்) (225) மாலை மார்ப! (261) – திருமுருகு., நக்கீரர்

தலைமாலை தலைக்கணிந்து தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்! – திருநாவுக்கரசு தேவாரம்

திருவாசகம் – திருவெம்பாவை – பா. எண் 12, 13, 14, 20
ஆகியவற்றிலிருந்து, ஏற்புடைய வரிகள், நிரலாக:

பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்!

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்....
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த.....
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்!

..... சூழ் கொன்றைத் தார்பாடி....

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்.....
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்...
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்....

திருப்பள்ளியெழுச்சி பா 1, மற்றும் பா 4 மேற்கோள் வரி :

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூம்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கு அருள்மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுவோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடிஉடை யாய்எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே !

..... துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்....

## அடியாரைப் பூவும் பொன்துகளும் தூவி வரவேற்றல் :

பூவும் பொரியும் பொற்றுகளும்
பொழிந்து பணிவார் பொருவில் இவர்
மேவும் பொன்னித் திருநாடே
புவிக்குத் திலகம் எனவியப் பார்
பாவும் துதிகள் எம்மருங்கும்
பயிலவந்து மாளிகையின்
மாவும் களிறும் நெருங்குமணி
வாயில் புகுந்து மருங்கிழிந்தார்

- பெரியபுராணம், கழறிற்றறிவார்....

## மலராகவும், பாஅணி மலராகவும் விளங்கும் தாமரை ;

தாமரைக் கோவும் நன்மாலும்
வணங்கத் தலைப்பிடத்துத்

தாமரைக் கோவணத் தோடிரந்
துண்ணினும் சார்ந்தவர்க்குத்
தாமரைக் கோமளத் தோடுல
காளத் தருவர் கண்டீர்
தாமரைக் கோமளக் கைத்தவ
ளப்பொடிச் சங்கரரே!
– கபிலதேவநாயனார்; சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை

தாமரையின் தாள்தகைத்த தாமரைகள் தாள்தகையத்
தாமரையிற் பாய்ந்துகளுந் தண்புறவில் – தாமரையின்
ஈட்டம் புலிசிதறும் ஈங்கோயே எவ்வுயிர்க்கும்
வாட்டங்கள் தீர்ப்பான் மலை!
– நக்கீரர் தேவநாயனார்; திருஈங்கோய்மலை எழுபது

ஔவையாரால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட தொண்டை நன்னாடு காஞ்சியில் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய, கச்சியப்ப சிவாசாரியார், கந்தபுராணத்தை ஆறுகாண்டம், 10,345 பாக்களில் இயற்றியுள்ளார். பூ அல்லது பூவின் பெயர்கொண்டு அமைந்த சொல் / தொடர், நூலில் நிரம்ப உள்ளன. முதல் பாடலிலேயே, தாமரை நாயகன் என்னும் சொற்றொடர் அமைந்துள்ளது; நிறைவு காண்டம், நிறைவு படலம், பா நெடுந்தொடர் எண் 10,332 கந்தமும் மலரும் போல எனும் உவமையை ஏற்றுப் புகழ்சுவட்டுகிறது. நூல் முழுவதும் உள்ள பூப்பெயர்களுக்குச் சில சான்றுகள் காண்போம்:

தாம ரைத்தலை யிருந்தவன்.....
– 1. உற்பத்தி காண்டம்; படலம் 16, அயனை...

செங்கம லத்திறை ... 5 தேவகாண்டம்; படலம் 2, தெய்வயாண

தாமரை என்னும் தண்பூந் தவிசிடைத் திகழ்ந்த அண்ணல்
மாமல ரடியின் வீழா மாதுலன் வெகுண்டு சொற்ற....
– 6. தட்ச காண்டம்; படலம் 4, சந்திர...

## குறள் வெண்பாவில் புதுமலர்

செவ்வேளால் பேறுபெற்ற ; செந்தமிழ், வேல், தாமரை,
நல்மயில், பூ காந்தள், கடம்பு! – சி.பா.

## அபிராமி அந்தாதியில் உவமைத்தேன், பூ

விழிக்கே அருளுண்டு..... எனத் தொடங்கும் பாடலால், தேவி தரிசனம் பெற்ற புகழ் கொண்ட, அபிராமி பட்டர், அபிராமி அந்தாதி இயற்றியவர். நூல் தொடங்க, கணபதி காப்பு பாடலில் முதல் அடி :

தாரமர் கொன்றையும் சண்பக

மாலையும் சாத்தும் தில்லை....

நூல், முதல்பாடல், உதிக்கின்ற... எனத் தொடங்கி, நூறாம் பாடல், ஈற்றடி நிறைவு... உதிக்கின்றவே ! என அமைந்தும், ஒவ்வொரு பாடலின் ஈற்றடி நிறைவில் உள்ள சொல் / தொடர் அடுத்த பாடலின் தொடக்கமாகவுள்ள அழகே அழகு : அந்தாதியழகு !

மாதுளம் போது, முதல் பாடலில் சுட்டப்படுகிறது;

மாதுளம் பூ நிறத்தாள்.... என்னும் தொடர், நூல் பயன் சுட்டும் பொருளமைந்த 101 ஆம் பாடலில் அமைந்து, சிந்தை மகிழ்விக்கின்றது.

நூல் பாடல்களில் தோன்றி, படிப்பவர் உள்ளத்திலும் கருத்து மணம் கமழச்செய்யும் பூ, பூ தொடர்புடைய தொடர்கள், வருமாறு :

பனிமலர்ப்பூ ; கொன்றை வார்சடை; சென்னியது உன்பொன் திருவடித் தாமரை: என்றும் வணங்குவது உன் மலர்த்தாள்; எழுதாமலரையின் ஒன்றும் அரும்பொருளே : அரவிந்தமெல்லாம் துதி செய ; கஞ்சமோ ; இளவஞ்சிக்கொம்பே ; கமழ்பூங் கடம்பு சாத்தும் குழல் அணங்கே ; பரிமளப் பூங்கொடியே ; நின்புதுமலர்த்தாள் ; பாதம் எனும் வாசக் கமலம் ; பைந்தேன் அலங்கல் ; பொன்செந்தேன் மலரும் அலர் ; கைக்கே அணிவது கன்னலும் பூவும் ; கமலம் அன்ன மெய் ; பூங்குவளைக் கண்ணி ; பத்ம பாதம் ; அடித்தாமரை ; அம்புயம் ; செங்கைக் கரும்பும் மலரும் ; பூங்குழலாள் ; கோன்சடை மேல்வைத்த தாமரை ; வண்டு கிண்டி வெறித்தன் அவிழ்கொன்றை வேணிப் பிரான் ; அகத்தாமரை ஆரணங்கே ; பனிச்சிறை வண்டார்க்கும் புதுமலர் ஐந்து ; அல்லியந் தாமரைக் கோயில் வைகும் யாமள வல்லி ; குழையத் தழுவிய கொன்றையம் தார்கமழ்... வல்லி ? .... இவ்வாறெல்லாம் உயர்வுபெறு பூக்களால், வழிபடுவதன்றோ, பூப்பல்லக்குப் பெருவிழா !

## மக்கள் பூ, பூமாலை அணிதல்

கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே – தொல்.பொருள், மரபு

தலைவாரி பூச்சூட்டி உன்னைப் பாட

சாலைக்குப் போஎன்று சொன்னாளுன் அன்னை...

ஆரம் நாறும் மார்பினை... (குறு. 198) எனும் வரிகள், முறையே, மக்கள் சென்னியில் பூச்சூடலுக்கும், மார்பில் பூமாலை அணிதலுக்கும் எடுத்துக்காட்டுகள்.

## மூவேந்தர் அடையாளப் பூக்கள்

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்

அடிக்கு நெருஞ்சிப் பழம்

மோப்பக் குழையும் அனிச்சம்..... என்னும் வான்மறை வரிகளில், வள்ளுவர் அனிச்சம்பூவின் நுட்பம், மென்மை உணர்த்தியுள்ளார்; பிற பூக்களுக்கும் இக்குணங்கள் ஏற்புடையனவே. அனிச்சம்பூக் கால்களையாள், வெய்தாள்... எனவரும் குறட்பாவில், பூவின் எடை குறைவான இயல்பும் உணர்த்தப்பட்டுள்ளது. பூக்கள் பாக்களில் கொண்ட ஆளுமைக்கோர் எடுத்துக்காட்டு இது. சூடத்தகும்பூ : பெரும்பாண். 291-296 காண்க.

காஞ்சி, வஞ்சி, கரந்தை, முல்லை என, மலர்ப்பெயர் பலவும் ஊர்ப்பெயர்களாகத் தொடர்வதை, இன்றும் தமிழகத்தில் காணலாம்.

இவ்வாறே, அரசர்களுக்கும், பூவின் அடையாளம் சேர்த்து வழங்கி, மரபாக்கி வைத்தனர்.

| அரசர் | உரிய பூ/தார் |
|---|---|
| சேரன் | பனை |
| சோழன் | ஆத்தி |
| பாண்டியன் | வேம்பு |

## மூவேந்தர் தார், குறள்வெண்பா

சேரவேந்தர், சோழவேந்தர், பாண்டியர் பூ சொல்லின் முறையே,
பனை, அத்தி, வேம்பு ! – சி.பா.

போர்மேற் செல்லும் ஆடவர், புறத்திணையின் துறை (மாலை வகை) பொருந்தப் பூவைப் பயன்படுத்தியது போலவே, தம்பணிக்கேற்ப மகளிர் பூவின் பயன் கொண்டனர்.

செங்குவளை பறித்தணிவார்....
பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய் மடுத்தயர்வார்!
- பெரிய புராணம்; -1, திருநாட்டு....

## தாமரை

பூவிற்குத் தாமரையே என்பர். செந்தாமரை, இலக்குமியின் வீற்றிருக்கையாதலை, ஓவியமாக வேந்தர் இரவிவர்மாவின் வண்ணத்தூரிகை, இழைத்து, பக்தரைப் பரவசப்படுத்துகிறது.!

குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடல், பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றியதாகும். இப்பாடல், பத்துக்குற்றம் நீங்கிய நல்ல பாடலாகுமெனப் பாராட்டுரை தந்தார்; யாப்பருங்கலக்காரிகை உரைகாரர். அப்பாடலின் தொடக்க வரியிலேயே, தாமரை அழகு செய்கின்றது:

தாமரை புரையும் காமர் சேவடி....

கம்பர், மருதஅழகை மரபுப் பாக்கொண்டு வண்ணப்படம் எடுத்த நொடியில், பகலை இரவு போல் கவிழ்நிழலால் காட்டிய சோலையில், வனப்புகொழித்த குளத்தில், தாமரை, ஓர் விளக்காகி நின்று, ஒளிவீசுவதை, ஒண்டமிழ் வரிகளில் சுவைத்து மகிழலாம்.

விவேகம் மணக்கும் விவேக சிந்தாமணிப் பாடல் ஒன்று, செந்தாமரையின் உடன்பிறந்தும், செந்தேன், நுகரா மண்டூகத்தையும், கானிலிருந்து சிறகடித்துப் பறந்து வந்து பயன்கொள்ளும் தேனீயையும், இலக்கியச் சுவை சொட்ட, அறிமுகம் செய்கிறது!

வான்புகழ் கொண்ட வள்ளுவனார், 617ஆம் திருக்குறளில், மடி இலான் தாள் உளாள் தாமரையினாள் என் பார்! உழைப்பு, தாமரையாளின் அருளுக்கு வழிவகுக்கும்!

வீங்கி இருமுளரி ஓங்கும்,

ஏங்கி இலைமறைவில் தூங்கும்!

என்னும் ஒற்றை அடி, ஒரு பாட்டின் கதையை யன்றோ நடத்துகிறது!

கதிரவனின் காதலியைப் பாடாத கவிஞர் யார்?

**பாரதியார், பாரதியைப் பாடினார் இப்படி:**

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,

வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்......!

அவரே, அருள் வேண்டி இலக்குமியைப் போற்றினார்:

ஏற்குமோர் தாமரைப்பூ – அதில்

இணைமலர்த் திருவடி இசைந்திருப்பாள்......!

தாமரையை ஏந்திய பாடல்கள், எத்தனை நூற்றாண்டுகள் ஆயினும், கற்பவர் நெஞ்சில் வண்ண ஓவியம் தீட்டி, நினைவில் மணம் பரப்புவன என்றால், மிகையல்ல. எடுத்துக்காட்டு:

நின்ற சொல்லர்; நீடுதோறு இனியர்;
என்றும் என்தோள் பிரிபு அறியலரே:
தாமரைத் தண்தாது ஊதி, மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீம்தேன் போல,
புரைய மன்ற புரையோர் கேண்மை;
நீர்இன்று அமையா உலகம் போலத்
தம்இன்று அமையா நம்நயந் தருளி,
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே!
– நற்றிணை 1, கபிலர் பாடல்; குறிஞ்சித்திணை;

பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது. இப்பாடலில் 3–5 வரிகளில், தலைவன் புகழைத் தலைவி உரைக்கின்றாள்.

தாமரைப் பூவிலுள்ள குளிர்ச்சி பொருந்திய தாதினைத் தேனீ எடுத்துச் சென்று, உயர்ந்த மலையிலுள்ள சந்தனமரத்தேன் இறாலில் சேர்த்துவைக்கும். அத்தேன் போல, உயர்வானதாகும் தலைவனின் நட்பு எனச் சான்றுரை மொழிதலையறியும் வாசகரின் நெஞ்சிலும், நினைவிலும், தேன்கலந்து இனிக்குமன்றோ ?

நாணத்தால் முகம்சிவந்த நற்றாமரை : (நேரிசை வெண்பா)

ஓரறிவுத் தாமரையே, உன் போல உன் இனத்தே,
யாரறிவு பெற்றார், எடுத்துரை ! – காரிருளில்,
கூர்மொட்டைக் கொண்டிருந்தாய்; காலைக் கதிர்க்காட்சி,
சேர்த்ததோநாண், செம்முகப்பூ சேர்ந்து ! – சி.பா.

போது அவிழ் தாமரைப் பூந்துறை ஊரன்.... எனவும்

அரசக்காம்பல், தாமரை, அம்செங் கழுநீர்,
ஒருக்கார்ந்த அல்லி, ஒலித்தாரக் குத்தும்

செருக்கார் வளவயல் ஊரன் – எனவும், எறும்பொழுங்கு போலப் பூப்பெயர்கள், புல்லங்காடனாரின் எழுத்தாணியில் வேர்கொண்டு எழும் !

## முல்லை

இறைவனின் படைப்பில், எத்தனையோ அதிசயங்கள். அவற்றில் ஒன்றுதான், இரவில் மலரும் பூக்களெல்லாம், பெரிதும், ஏழு வண்ணங்களின் இன்சுவைக் கூட்டணி என, அறிவியலார் நிறுவிய, பால் போன்ற வெண்ணிறத்தையே உடுத்தியுள்ள விந்தை ! இவற்றுள் பல, மிகை நறுமணம் என்னும் வரமும் பெற்றுள்ளன. மதுரை மல்லி (கை), ஆம்பூர் முல்லை என்றெல்லாம் புவிசார்ந்த அடைமணந்து, தாம் பிறந்த ஊருக்கும் பெருமை என்னும் மகுடம் சூட்டுகின்றன.

இந்நுட்பத்தையெல்லாம் முற்றாக உணர்ந்தன்றோ பாவேந்தர், முல்லை கொண்டு, எட்டடி நீளப் பாமாலை தொடுத்துத் தமிழன்னையின் திருவடிகளில் வைத்தார், இப்படி :

பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் ; மகிழ்ச்சிகொண் டேனே !

முல்லைக்குத் தேரீந்தான் வள்ளல் பாரி :
... பிள்ளை வெருகின் முள்ளயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி அரிவையர் தந்தை நாடே !
– கபிலர், பாரியைப் பாடிய, புறம். 117

பின்னர்,

இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், இக்கொடையைப் பதிவு செய்தார் ;

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரி.... சிறுபாண்: 89 – 91

பாடிவரும் இரவலர்க்குப் பொன்அணி, யானை, புரவி, ஊர்கள் கொடை வழங்கத் தயங்காத, பறம்பிற் கோமான் பாரியை, உலகம் பெரிதும் எண்ணிப்போற்றிப் புகழ்தல், ஓரறிவு முல்லைக்கும் உவந்தீந்த ஈகை அன்றோ?

## காந்தள்

முருகன் சூரபன்மாவை அட்ட காந்தட்பூவின் மிகுதியைச் சொல்லிய காந்தள் எனப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பை நல்கும். அடர் சிவப்பு நிறப்பூ காந்தள், இனமில்லா அடைபெற்றுச் செங்காந்தள் எனவும் வழங்கப்படுகின்றது.

நக்கீரர் தேவநாயனார்,

காந்தள் மலரக் கமழ்கொன்றை பொன் சொரிய எனவும், காந்தளங் கைத்தலங்கள் காட்ட... எனவும், முறையே கார்எட்டு, திருஈங்கோய்மாலை எழுபது ஆகியவற்றில் பாடியுள்ளார்.

காந்தளம் சென்னியன்..... என்பதும்,

காந்தள் போலிய கரத்தினீர்..... என்பதும்,

கச்சியப்ப சிவாசாரியர், கந்தபுராணத்தில், முறையே, தேவகாண்டம் திருப்பரங்குன்று சேர் படலம்; தட்ச காண்டம், வள்ளியம்மை திருமணப் படலம், ஆகியவற்றில் எடுத்தாண்ட இனிய தொடர்கள்!

அகத்திணை இலக்கியங்களிலும், காந்தள் நிரம்ப எடுத்தாளப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, அகநானூற்றில் பத்துப் பாடல்கள், குறுந்தொகை எட்டு பாடல்கள், நற்றிணை எட்டு பாடல்கள், ஐங்குறு நான்கு பாடல்கள் எனத் தொடங்கிப் பட்டியல் நீளும். சில எடுத்துக்காட்டு....

"காந்தள் கடி கமழும், கண்வாங்கு இருஞ்சிலம்பின்....."

– கலித்தொகை 39:15

"கைபோல் பூத்த கமழ்குலைக் காந்தள்......" பரி 19 : 76

"அருவி ஆர்க்கும் பெருவரை அடுக்கத்து,
குருதி ஒப்பின் கமழ்பூங் காந்தள்...
வரிஅணி சிறகின் வண்டுண மலரும்...." நற். 399

"சோலை அடுக்கத்துச் சுரும்புண் விரிந்த
கடவுட் காந்தள்....." – அகம். 152

"காந்தள் வேலி ஓங்குமலை..... காந்தளம் சிறுகுடிக்
கமழும் ஓங்குமலை..." குறு. 76 மற்றும் 373

ஞுஞசிலம்பு கமழ்காந்தள் நறுங்குலை அன்ன
நலம்பெறு கையின் என்கண் புதைத்தோயே!...." ஐங்குறு, 293

.......தொடரும்

# திருக்குறளின் தோற்றக் களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள் (பெருமை சிறுமை)

முனைவர் கா. அரங்கசாமி
கோபி

## முன்னுரை

சங்க இலக்கியம் பல்லாயிரம் ஆண்டுகளின் பண்பால் வளர்ந்தவை. அதன் தனிச்சிறப்பாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம். 1. உலகியல் பொதுமை (தமிழ் மக்கள் குமரிக் கண்டத்திலிருந்து உலகம் முழுதும் பரவினர் என்பதை எடுத்துக் காட்டும் ) 2. இயற்கைப் பின்புலம் ( இதனால் தமிழ் மக்கள் இயற்கையால் பட்ட துயருடன், இயற்கை நிலையையும் அறியலாம் ) 3. திணைநிலை இலக்கியம் (இதன்வழி ஒழுக்கம் உயர்வு என்பதையும் ஒழுக்கந்தவறின் அழிவு என்பதையும் அறியலாம் ) 4. நாட்டுப்புறப்பாங்கு (இதனால் தமிழ் இலக்கியங்கள் மக்கள் நல இலக்கியம், எதார்த்த இலக்கியம் என அறிதல் கூடும்) 5. இலக்கியக் கோட்பாடுகள் (இதன்வழிச் சங்க இலக்கியம் செவ்வியல் இலக்கியம் மட்டுமன்று கோட்பாட்டிலக்கியம் என்பதும் அறியப்படும்) இத்துணைச் சிறப்புக்களைக் கொண்ட சங்க இலக்கியம் போன்று உலகியலில் வேறு எந்த இலக்கியமும் தோன்றவில்லை என்பதையும் நாம் அறிதல் வேண்டும். ஆயினும் சங்க இலக்கியத்துள் குறைகளைக் கூறும் பகுதிகள் இல்லையா? என்பதையும் இங்கு நாம் விளக்க வேண்டும். பரத்தமை, மற்றும் மாந்தக் குறைகள் சிற்சில இருந்தன என்பதையும் நாம் அறிதல் வேண்டும். திருக்குறள் வழிச் சங்கச் சமூகத்தில் இருந்த சிற்சில குறைகளை நாம் அறியலாம். சங்க இலக்கியம் கூறும் பரத்தமை, கள்ளுண்ணல், புலால் உண்ணல் போன்றவற்றைத் திருக்குறள் கடியக் காண்க. அத்துடன் திருக்குறள் மக்கள் சமூகத்தில் உள்ள மாந்தர்களில் சரிபாதிப்பேர் தாழ்நிலையில் உள்ளதையும் காட்டும். திருக்குறள் குற்றங்கடிதல் அதிகாரத்தில் கூறுவதையும் 430 வது குறளில் கூறுவதையும் நாம் சிந்திக்க வேண்டும். மக்களில் 9 வகையினர், செத்தவராக, அலகையா, பதடியாக, விலங்காக, மரமாக, மரப்பாவையாக, மாக்களாக, சிறியராக, கயவராக உள்ளதைத் திருக்குறள் காட்டும். அவர்களைத் திருத்தும் பொறுப்பு நீத்தார், அறவோர், ஆன்றோர், சான்றோர், அந்தணர், பெரியார், துறவியர்,

உயர்ந்தோர், பண்புடையார், நடுவுநிலையாளர்க்குண்டு என்பதையும் அறிதல் நலம். இதனால் சங்க காலத்தில் சமுதாயத்தில் நிலவிய குறை நிறைகளை அறியலாம். சங்க இலக்கியம் நாடக வழக்கும் உலகியல் வழக்கும் கொண்டது என்பதால் இந்த நிலை ஏற்பட்டது. பெரும்பாலும் நல்லது நவிலல் என்ற கோட்பாட்டின் வழி அமைந்து சிறந்தன. சங்க இலக்கியத்துள் பெருந்திணையும், கைக்கிளையும் சிறப்பிடம் பெறவில்லை என்பதையும் நாம் அறிய வேண்டும். அங்குச் சிறுமையைப் போற்றும் நிலை இல்லை என்பதையும் நாம் உணரவேண்டும் ( இன்றைய இதழ்கள், சின்னத்திரை பெரியதிரை மக்களைக் கெடுப்பதையும் நாம் நினைக்க வேண்டும் ) எனவே சங்க இலக்கிய நோக்கு உயர்ந்த பெரியார் நோக்கு என்பதையும் நாம் மறத்தல் கூடாது.

## அறவியல் திறமும் மெய்யியல் நோக்கும் :

சங்க இலக்கியத்தில் செவியறிவுறூஉ, பாடாண்திணை, இயன்மொழி போன்ற துறைகள் நல்லறச் செய்திகளையே கூறுவன. தொல்காப்பியம் முதற்கொண்டு அறவியல் மெய்யியல் கூறும் நோக்குச் சங்க இலக்கியத்துள் இருந்த பாங்கினை நாம் காணலாம். கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டுத் தமிழர் தம் அறவியல் மெய்யியல் அகத்தில் பெற்ற சீரினைக் கூறும் (இதனை எமது கபிலர் என்னும் நூலில் காண்க. சாகித்திய அகடமி வெளியீடு குறிஞ்சிப்பாட்டு அறத்தொடு நிற்றல் என்ற துறையின் சிறப்பைக் கூறுவது.

உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்

செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று (1058)

என்னும் இலக்கணத்துக்கு ஏற்பக் கீழ்வரும் தொடர்கள் அமையக் காண்க.

முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குறைய கலம்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசு அறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல்
ஆசு அறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொல் மருங்கு அறிஞர் (குறிஞ்சிப்பாட்டு 20 முதல்)

என்பதால் பெண்மையின் பெருமை கூறும் அறவியல் மெய்யியல்

அறியலாம். சங்க இலக்கியம் முழுதும் இத்தகைய சிறந்த அறவியல் மெய்யியல் நிறைந்துள்ள பாங்கினையும் நாம் காணலாம். கீழே பட்டியல் இட்டுள்ள கோட்பாடுகளைக் காணின் சங்க இலக்கியச் செழுமை அறியப்படும். தொல்காப்பியம் 813வது நூற்பாவில் ஆய்வு இலக்கணம் கூறும். அந்த இலக்கணத்துக்கு இலக்கியமாக அமைந்த சங்க இலக்கியக் கோட்பாடுகளைப் பட்டியல் இட்டுப் பார்ப்போம்!

1. அகத்திணைக் கோட்பாடு

2. புறத்திணைக் கோட்பாடு 3. வாழ்வியல் நோக்கு

4. ஒழுக்கக் கோட்பாடு 5. இயற்கைப் பின்புலக் கோட்பாடு

6. பொதுமை அறக் கோட்பாடு 7. முதற்பொருள்

8. கருப்பொருள் 9. உரிப்பொருள் 10. உவமை 11. உள்ளுறை

12. இறைச்சி, 13. மெய்ப்பாட்டியல் 14. மரபியல்

15. புராணக் கோட்பாடு 16. பொருளியல்

17. தெய்வக் கொள்கை (மனிதனைத் தெய்வமாக்கும் வித்தை)

18. நூலாக்கம் 19. நோக்கு 20. செவியறிவுறூஉ

21. முதுமொழி 22. ஈகம் 23. தமிழியல் கோட்பாடு

24. இனவியல் 25. குறியீட்டியல் 26. சடங்கியல்

27. தன்னுரிமை 28. தொன்மக் கோட்பாடு 29. குறிப்புமொழி

30. எள்ளல் 31. உலகியல் வழக்கு 32. நாட்டுப்புறவியல்

33. புராண மறுதலை 34. உளவியல் 35. குமுகாயவியல் (மாந்தவியல்)

36. இயல்புநிலை 37. ஊழ்வினை 38. அறிவர் நெறி

39. அழகியல் 40. செவ்வியல் 41. பெண்மைச்சீர்

42. கலையியல் 43. பாலியல் 44. இசைமை

45. நாடக வழக்கு 46. அறவியல் 47. வரலாற்றியல்

48.மெய்யியல் போன்ற கோட்பாடுகளின் வழிச் சங்க இலக்கியம் செவ்வியல் இலக்கியம் மட்டுமன்று, உலகினைச் செம்மை செய்யும் உயர்ந்த இலக்கியம் என்பதையும் அறியலாம். மேலும் கீழ்க்கண்ட சில தொடர்கள் சங்க இலக்கியத்தின் பெருமை காட்டும். அவற்றைக் காண்போம் (சில சான்றுகள்)

1. நின்ற சொல்லர் நீடு தோன்று இனியர் (நற்)
2. அறிவு அறிந்து அளவல் வேண்டும் (நற்)

3. இசைபட வாழ்பவர் செல்வம் போல (நற்)
4. தேறுவன் மன் யான் அவனுடை நட்பே (குறு)
5. உயர்நிலை உலகம் சிறிதால் (குறு)
6. பெரு நன்று ஆற்றின் யேணரும் உளரோ (குறு)
7. மழையினும் பெரும் பயன் நல்குமதி (குறு)
8. நீர் ஓரன்ன சாயல் (குறு)
9. நல்கூர்ந்தார் செல்வ மகள் (கலி)

மேற்காட்டிய சான்றுகள் போல ஏராளமான சான்றுகளைக் காட்டலாம்.

## முடிவுரை

சங்க இலக்கியத்தின் சிறப்புகளை அறிவதற்கு நிறைந்த சான்றுகள் உள்ளன என்பதையும் நாம் அறிய வேண்டும். சங்க இலக்கியம் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த புலவர் பெருமக்களின் தொகுப்பு என்பதால் அதன் அருமை, பெருமை உணரப்படும். அது செவ்வியல் இலக்கியம் மட்டுமன்று; அறவியல் மெய்யியல் கூறும் தலைசிறந்த இலக்கியம் என்பதையும் நாம் மறத்தல் கூடாது. அதன் இயற்கைப் பின்புலத்தையும், இழிவு புகாத சிறப்பினையும் அறிஞர்கள் பலர் எடுத்துக் காட்டியுள்ளனர். இக்கட்டுரை அதன் கோட்பாட்டுச் சிறப்பினை மட்டும் விளக்கி உரைக்கின்றது. அதன் சிறந்த தொடர்கள் பல்வேறு துறைகள் சார்ந்த குறிப்புக்கள் நிறைவாக உள்ளன. சங்க இலக்கியம் மெய்யியல் கூறுவதுடன் அறவியல் கூறும் பாங்கின. தமிழ் நெறி களவும் கற்பும் ஆகும். அதனால், 1. பெண்மைபெற்ற சிறப்பு 2.. அறத்தொடு நிற்கும் ஆளுமை, 3. ஆணின் ஆற்றலைப் பெண்மை வென்று நிற்கும் தன்மை 4. இல்லறம் நல்லறம் ஆதல் 5. ஏற்றத் தாழ்வற்ற சமூகம் 6. மக்கட் பண்பாடு 7. அறவழி நிற்கும் மன்பதை 8. வாழ்க்கையின் உயிர் 9. தம்மைத் தாமே உணர்ந்து செயல்படும் இயல்பூக்கம் 10. சமூக உறவு என்பன போன்றவை சங்க அக இலக்கியம் உணர்த்தும் அறவியல் மெய்யியல் ஆகும். எனவே சங்க இலக்கியம் காட்டும் பெருமையும் அருமையும் தனிச்சிறப்புடையன என்பதையும் நினைதல் வேண்டும்.

# தாய்த் தமிழைச் சேய்கள் மறந்ததேன்?

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

தமிழ்கூட மண்மீதில் இழைத்து விட்ட
தவறொன்றும் உண்டென்றார் அறிஞர் அண்ணா!
தமிழ்செய்த தவறென்ன? என்றால் அஃது
தமிழனுக்குத் தாய்மொழியாய் வாய்த்த தொன்றே!
அமிழ்தனைய இலக்கியங்கள் குலுங்கி நிற்கும்
அழகுதமிழ் இந்நேரம் ஐரோப் பாவில்
அமைந்துள்ள ஒருநாட்டில் பிறந்தி ருந்தால்
அகிலமொழி எனஓங்கி இருக்கும் என்றார்!

வாய்மொழியாய்த் தாய்மொழியைப் பேசு தற்கும்
வக்கில்லாத் தமிழ்நண்பா! ஒன்று கேட்பேன்;
சேய்களெலாம் தாய்த்தமிழை மறந்தே பாழும்
தேம்சுமொழி ஆங்கிலத்தில் பேசல் ஏன்? ஏன்?
போய் அவரைக் கான்வெண்ட் டில் சேர்த்து விட்டுப்
புலம்புவதும் நடிப்பல்லவா? சுரைவி தைத்தால்
காய்வேறு காய்த்திடுமா? தமிழா! உன்றன்
காதையதன் பாதையினை மாற்று வாயா?

உலகமதில் சப்பானும் செருமன் நாடும்
ஒப்பரிய முன்னேற்றம் காண்ப தேன்? ஏன்
துலங்குகின்ற தாய்மொழியின் வழியில் கல்வி
தொடக்கமுதல் இறுதிவரை கற்ப தால்தான்!
பலஆண்டும் முன்னாலே கடையைக் கட்டிப்
பறங்கியனோ போய்விட்டான்; எனினும் அன்னோன்
விலங்கு மொழித் தளையுள்ளே வீழ்ந்து மாய்தல்
வெட்கமென்றே கணமேனும் சிந்தித் தாயா?

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/57 August 2013 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம்
- ✦ இளங்கலை
- ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர்
- ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 2013-2014ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மூ. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.